3. தகவல் கோரல்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் உண்ணாவிரதம் இருப்பதையொட்டி நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப் பட்டுள்ளவர்கள் குறித்து.

9-35 மணி

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங் களில் ஈடுபடாது இருப்பவர்களையும் காவல் துறையினர் கைது செய்து கொண்டு வருகிறார்கள். எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் சிலர் அப்படிக் கைது செய்யப்பட்டிருக்கிறார் கள். வன்முறையில் ஈடுபடுகிறவர்கள் மீது நடவடிக்கை எடுப் பதில் எங்களுக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் சம்பந்தம் இல்லாதவர்கள், அதில் எந்தவிதமான ஈடுபாடும் இல்லாதவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டு வரு கிறேன். தேவையில்லாமல் கைது செய்யப்பட்டிருப்பவர்களை விடுதலை செய்ய அவர்கள் முன்வருவார்களா என்று அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்று வந்த வன்முறைச் சம்பவங் களுக்குச் சம்பந்தமே இல்லாதவர்கள் யாரும் கைது செய்யப் படவில்லை. திட்டமிட்டு சில வன்முறைச் சம்பவங்கள் தமிழ் நாட்டில் கட்டவிழ்க்கப்பட்டுள்ளன. இப்போது நிலைமை கட் டுக்கு அடங்கியதாகத்தான் இருக்கிறது. எனினும் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர் கள் உண்ணாவிரதத்தை இன்னும் கைவிட்டதாக அறிவிக்க வில்லை. எனவே ஆங்காங்கே வன்முறைச் சம்பவங்கள், ஒரு சில சம்பவங்கள் நடைபெற்றுத்தான் வருகின்றன. ஏற் கெனவே பொதுச் சொத்துக்களுக்கு 48 லட்சம் ரூபாய் அள விற்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக இன்று பேசுவதாக இருக்கவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இந்தப் பிரச்சினையை எழுப்பி உள்ள தால் சில தகவல்களை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். போக்குவரத்து வாகனங்களுக்கு ஏற்பட்ட சேதம் மட்டும் சுமார் 48 லட்சம் ரூபாய் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. இரயில் போக்குவரத்தைத் தடை செய்யக் கூடிய நாச வேலைகளும் ஆங்காங்கே நடைபெற்று உள்ளன.

1991 ஜூலை 9] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

சென்னை-திருச்சி இரயில் தடத்தில் ஆர்.எஸ். மாத்தூர் ரயில் நிலையம் அருகில் தண்டவாளத்தின் மீது வைக்கப்பட்டிருந்த பாறாங்கற்கள் மீது முத்துநகர் விரைவு வண்டி மோதி எஞ்சினின் முற்பகுதி சேதம் அடைந்தது. அதே நாள் கோலியனூர் அருகில் தண்டவாளத்தின் மீது வைக்கப்பட்டிருந்த பாறாங்கற்கள் மீது விழுப்புரம்-பாண்டிச்சேரி பாசஞ்சர் இரயில் மோதி நின்றது.

6-7-1991 அன்று இரவு அம்பத்தூர் அருகில் பட்டரவாக்கம் இரயில் நிலையத்தில் சென்னையை நோக்கி வந்து கொண்டிருந்த மின்சார ரயில் மீது கற்களை வீசி கண்ணாடிக் கதவுகள் நொறுக்கப்பட்டன. இரயில் ஓட்டுநர் மீதும் மண்ணெண்ணெயை ஊற்றி தீ வைக்கவும் வன்முறையாளர்கள் முயற்சி செய்தனர். காவல் துறையினர் தக்க சமயத்தில் தலையிட்டு கும்பலை விரட்டினர்.

7-7-1991 அன்று அதிகாலை செங்கை மாவட்டத்தில் உள்ள கடம்பத்தூர் இரயில் நிலையம் அருகில் லொகேஷன் பாக்ஸ் எனப்படும் கருவி சேதப்படுத்தப்பட்டது. வழி காட்டும் கருவிகள், சிக்னல் எக்யூப்மெண்ட்ஸ் இயக்கமும் தடை செய்யப்பட்டது. அஃதன்றி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சிச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. தென்னாற்காடு மாவட்டத்தில் மந்தாரக்குப்பம் என்ற இடத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அலுவலகம் தாக்கப்பட்டு, கீற்றுக் கொட்டகை பிரித்துச் சேதப்படுத்தப்பட்டது.

நெய்வேலி அருகில் தாண்டவன்குப்பம் என்ற இடத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிலை ஒன்று சேதப்படுத்தப்பட்டது. இது போன்ற வன்முறைச் சம்பவங்களால் பேருந்து ஓட்டுநர், நடத்துனர், பயணிகள், காவல் துறையினர் மற்றும் பொதுமக்கள் 37 பேர் காயம் அடைந்துள்ளனர். இதுவரை கவர்ன்மெண்டுக்குச் சொந்தமான 202 வாகனங்கள் மற்றும் 79 இதர வாகனங்கள் கல் எறியப்பட்டதால் சேதம் அடைந்துள்ளன. ஆங்காங்கே சில வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்று வருவதாகச் சில தகவல்கள் வருகின்றன. ஆனால் நேற்றைய இரவுக்குப் பிறகு நிலைமை கட்டுக்கு அடங்கியதாகத்தான் இருக்கிறது. இதுவரை மொத்தம் 5,653 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் ஸ்பெசிபிக் அரெஸ்ட்—ஸ்பெசிபிக் அஃபென்சுக்காகக் கைது செய்யப்பட்டவர்கள் 1,842 பேர். ப்ரிவெண்டிவ் அரெஸ்டின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் 3,811 பேர். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்தது போல் சம்பவங்களுக்குச் சம்பந்தம் இல்லாதவர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை. இந்த நேரத்தில் ஒன்றைச்

சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திட்டமிட்டு இந்த வன்முறை கட்டவிழ்க்கப்பட்டுள்ளது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

9-40 மணி

பொதுவாக இந்தியாவில் மட்டும் அல்ல, உலகெங்கிலும், எந்த நாட்டிலும் உள்ள ஒரு மரபு, ஒரு புதிய ஆட்சி பொறுப்புக்கு வந்தவுடன், பொறுப்பேற்றவுடன், ஒரு ஆறு மாத காலமாவது —ஒரு க்ரேஸ் பீரியட், ஹனிமூன் பீரியட் என்று கூடச் சொல் வார்கள்—விடுவது தான் மரபு. அப்படி விடுவது தான் வழக்கம். ஆனால் இங்குள்ள நிலைமையை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு பெண், அதுவும் இந்தப் பெண் முதலமைச்சராக வந்துவிட்டாளே என்று ஒரு சிலரால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை; தாங்கிக் கொள்ள முடியவில்லை. இதே அவையில் இன்று கூட உறுப்பினர்களாக உள்ள ஒரு சிலர் இந்தப் பெண்ணை ஆட்சிக்கு வரவிட மாட்டோம்; அப்படியே வந்தாலும் ஆட்சியை நிம்மதியாக நடத்த விடமாட்டோம் என்று வெளிப்படையாகவே பேசியவர்கள். அவர்கள் பேசிய பேச்சுக்கள் இந்த அவைக் குறிப்பேட்டிலேயும் ஏற்றப்பட்டிருக்கிறது. அப்படிப் பட்டவர்கள் இன்றும் இந்த அவையின் உறுப்பினர்களாக இருக் கிறார்கள். இத்தகைய எண்ணத்தை அவர்கள் வெளிப்படை யாகவேதெரிவித்து, அதன்படி திட்டமிட்டுச் செயல்பட்டு வரு கிறார்கள். அப்படி இருக்கின்ற நிலையில் எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒரு விஷயம் இது.

இப்பொழுது என்ன நடந்துவிட்டது? இந்த ஆட்சியின் மீது குறை கூறும் அளவிற்கு, இந்த ஆட்சியை எதிர்த்துப் போராட் டம் நடத்தும் அளவிற்கு, இந்த அளவிற்கு வன்முறைச் சம்பவங் களைக் கட்டவிழ்த்து விடும் அளவிற்கு என்ன நடந்துவிட்டது? எதுவுமே நடைபெறவில்லை.

ஆனால் ஒரு பெண் ஆட்சிக்கு வந்துவிட்டாளே என்ற பொறாமையால், காழ்ப்புணர்ச்சியால் சிலர் இப்படிச் செய் கிறார்கள். இது சம்பந்தமாக இதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று முதலமைச்சர் ஆசனத்தில் நான் அமர்ந்து இருக்கிறேன் என்றால், இதை அடைய நான் மலர்கள் தூவிய பாதையில் நடந்து வரவில்லை; கல்லும், முள்ளும் நிறைந்த கரடு முரடான பாதையில், கல்லடியும், சொல்லடியும் பட்டுத் தான் இன்று இந்த இடத்திற்கு வந்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). போராடிப் போராடித்தான் அரசியல் வாழ்க்கை யில் இந்த நிலையை அடைந்திருக்கிறேன். எனவே வன்முறை யாளர்களுக்கு இதையும் சொல்லிக்கொள்வேன். இந்த அரசு நியாயமாக நடந்துகொள்ளும். விட்டுக் கொடுக்க வேண்டிய விஷயங்களில் விட்டுக் கொடுக்கும். ஆனால் இப்படி அரட்டி, உருட்டி, மிரட்டி சங்கடங்களை விளைவித்து, இந்த அரசை

1991 ஜூலை 9] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

இயங்காமல் செய்ய முடியும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) யாராவது கருதுவார்களேயானால், அவர்கள் ஏமாந்துதான் போவார்கள்.

இதுவரை என் அரசியல் வாழ்க்கையில் எதிர்ப்பைக் கண்டு நான் அஞ்சியது இல்லை. அதைப் போலவே ஆட்சி நடத்துவதிலும் எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் அதைக் கண்டு அஞ்சப் போவதும் இல்லை. சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டியே தீருவோம். எனவே பொதுச் சொத்திற்கு சேதம் விளைவிக்கக் கூடியவர்கள், சட்டம்-ஒழுங்கைக் கெடுக்கக்கூடியவர்கள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் கைது செய்யப்படுவார்கள். நிலைமை சீரடைந்த பின் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள். இதில் எந்த மாற்றமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. தம்புசாமி அவர்கள்.

* திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் சில கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதம் மேற்கொண்டு இருக்கிறார்கள். அதனால் தமிழகத்திலே எத்தகைய பதட்ட நிலை ஏற்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். அந்த உண்ணாவிரதத்தை ஒரு முடிவிற்குக் கொண்டு வரக் கூடிய வகையில் அரசுத் தரப்பிலே முயற்சித்து அவரோடு பேசி எதிர்காலத்திலே ஒரு நல்ல தீர்வு காண்பதற்கு, எந்த ஒரு அமைதி பங்கத்திற்கும் இடம் இல்லாமல் ஒரு முடிவிற்குக் கொண்டு வருவதற்கு, அரசும், அந்தக் கட்சியைச் சார்ந்தவர்களும் முயற்சிக்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இந்த உண்ணாவிரதத்தை முடிவிற்குக் கொண்டு வருவதற்காக என்னென்ன முயற்சிகளை எடுக்க முடியுமோ எல்லாவற்றையும் எடுத்தாகிவிட்டது. நேற்றே திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தண்டனை ரத்து செய்யப்பட்டது.

9-45 மணி

அதோடு இந்தப் பேரவையிலேயே பேரவையின் சார்பிலேயே, அரசின் சார்பிலும், என் தனிப்பட்ட சார்பிலும் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள்

உண்ணா விரதத்தைக் கைவிட வேண்டும் என்று வெளிப்படையாகவே கேட்டுக்கொண்டு ஆகிவிட்டது. திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் மீண்டும் அவைக்குத் திரும்பி வர வேண்டும், அவையின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் கூறியாகிவிட்டது. இதற்கு மேல் என்ன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் இந்த அவையிலே நேற்றைய தினம் நீங்கள் அறிவிப்பு வெளியிட்டு இருக்கிறீர்கள். அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அவர்களிலே ஒருவர் 'ரத்து அல்ல, குறைக்கப்பட்டிருக்கிறது' என்று என்னிடத்திலே நேற்றைய தினம் சொன்னார்கள். சுமுகமான சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு நேற்று இரவு உண்ணாவிரதம் இருக்கின்ற பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களைச் சந்தித்து உண்ணா விரதத்தைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காக நான் பொது மருத்துவமனைக்குச் சென்று இருந்தேன். நான் சென்ற நேரத்தில் அங்கே இருந்தவர்கள் எல்லாம், நான் அறிந்தவர்கள் தான், தெரியாதவர்கள் யாரும் அங்கே இல்லை, வெளியே இருந்தவர்களிடம் பேசிக் கொண்டு இருந்தேன். உள்ளே போய் ஒரு 10 நிமிடங்களுக்கு மேலாக அங்கே அமர்ந்து இருந்தேன். உறக்கத்திலே இருந்தார்கள். அவர்களிடத்திலே என்னால் பேச இயலவில்லை. ஒரு வேலை களைப்பின் காரணமாக, சோர்வின் காரணமாக அவர்கள் உறங்கிக் கொண்டு இருந்தார்கள் என்று நினைக்கிறேன். என்றாலும் நம்முடைய அத்தனை பேர்களுடைய உணர்வுகளையும் நான் அவர்களிடத்திலே தெளிவாகச் சொன்னேன். நீங்கள் எது வேண்டும் என்று கேட்டீர்களோ—தண்டனை ரத்து—என்னைப் பொறுத்தவரையில்—அது ரத்துச் செய்யப்பட்டதாகத் தான் நேற்றைய தினம் நீங்கள் அறிவித்தீர்கள்—நானும் அது ரத்து செய்யப்பட்டு இருப்பதாகத்தான் கருதுகிறேன். திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் மீது விதிக்கப்பட்ட தண்டனை ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இன்னொரு உறுப்பினருக்குத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அளவில் இதை ஏற்றுக் கொண்டு பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டும். உண்ணாவிரதம் தொடர்ச்சியாக இருப்பதன் காரணமாக அவருடைய ஆதரவாளர்கள், அவர்மீது அன்பு கொண்டவர்கள் வன்முறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

வன்முறைக்குத் திசை தெரியாது; திசை கிடையாது. யார்மீது எப்போது வன்முறை பாயும் என்று யாராலும் சொல்ல முடியாது. எனவே இந்தப் பிரச்சினையிலே எந்த வகையிலும் சம்பந்தப்படாத மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களிடத்திலே நான் தெளிவாகவே சொன்னேன், நீங்கள் சபைக்கு வந்து சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள வேண்டும் என்று சபையில் இருக்கின்ற அனைத்துத் தரப்பினரும் ஒருமனதாக விரும்புகிறார்கள், அவர்கள் சார்பிலும் நான் கேட்டுக்கொள்கிறேன், ''உங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற தண்டனை ரத்து செய்யப்பட்டிருக்கிறது, எனவே சபையின் நடவடிக்கைகளில் நாளையிலிருந்து கலந்து கொள்ளவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டேன். நம்முடைய உணர்வுகளை டாக்டர் ராமதாஸ் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி அவர் உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறேன். இது தவிர என்ன செய்ய வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள் என்று நம்மால் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு பிரச்சினையைப் பொறுத்தவரையில் நிச்சயமாக இயலாத ஒன்று. அவருக்கு விதிக்கப்பட்டு இருக்கின்ற கோரிக்கைகளில் மிக முக்கியமான கோரிக்கை என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். எதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும், ஏன் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று அவர்களால் தெளிவாகச் சொல்ல முடியவில்லை. அந்த ஒரு கோரிக்கையைத் தவிர மற்ற அனைத்துக் கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டன. அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை நல்லறிவாளர்கள் அத்தனை பேரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் திடமாக நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

எனவே மீண்டும் பேரவையின் சார்பிலும், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலும் மாண்புமிகு முதலமைச்சருடைய வேண்டுகோளை ஏற்று, எங்களுடைய வேண்டுகோளை ஏற்று, டாக்டர் ராமதாஸ் அவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே இருக்கின்ற நண்பர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நண்பர்கள் போன்றவர்கள் அவர்களிடத்திலே சென்று நம்முடைய உணர்வுகளை வெளிப்படுத்தி அவர் உண்ணாவிரதத்தைக் கைவிடுவதற்கு அவர்கள் வழி காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் பதட்ட நிலை உள்ளதாகக் குறிப்பிட்டார்கள், அதை நான் ஏற்கவில்லை; ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த விவகாரத்திலே ஒரு சில சட்டமன்ற உறுப்பினர்களும், பத்திரிகையாளர்களும் தான் பெரிதுபடுத்தப்பார்க்கிறார்கள். ஒரு பதட்ட நிலை இருப்பது போல பத்திரிகைகளில் ஒரு தோற்றத்தை உருவாக்கப் பார்க்கிறார்கள். இப்போது சட்டம்-ஒழுங்கு நிலைமை சீராக உள்ளது; கட்டுப்பாட்டில் உள்ளது. என்னைப் பொறுத்தவரையில், அரசைப் பொறுத்தவரையில் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் இன்னும் உண்ணாவிரதத்தைத் தொடர்வதற்கு எந்த நியாயமான காரணமும் இல்லை. மீண்டும் அரசின் சார்பிலும், என் தனிப்பட்ட சார்பிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் டாக்டர் ராமதாஸ் அவர்கள் உண்ணாவிரதத்தை இத்துடன் முடித்துக்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை விடுக்கிறேன். ஆனால் இதையும்மீறி இதைத் தொடர்வார்களேயானால், மேலும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளைக் கிளப்ப முயற்சிப்பார்களானால் இந்த அரசு எது வந்தாலும் சந்திக்கும்; சட்டம் ஒழுங்கை நிலை நாட்டியே தீரும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம். இன்று விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. செ. ரகுபதி.

4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி.

9–50 மணி

திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினராக ஆகின்ற பொன்னான வாய்ப்பினை உருவாக்கித் தந்த, திராவிட இயக்கத்தினுடைய காவல் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும், என்னை திருமயம் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியினைக் கூறி, நான் வணங்குகின்ற மனித தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இருக்கிற திசை நோக்கி வணங்கி, ஆளுநர் உரைக்கு நன்றி கூறுகிற இந்தத் தீர்மானத்திலே என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.